**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.43/2025 - PW-7**

| | |
|---|---|
| Name | திருமதி. பாரதி |
| Husband/Father Name | திருநாவுக்கரசு |
| Village /Area | ஆற்காடு |
| Taluk | ஆற்காடு |
| Occupation | கிராம நிர்வாக உதவியாளர் |
| Age | 35 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 07.11.2025.

**(எதிரிகள் ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் தற்போதும் சம்பவத்தின் போதும் சித்தேரி கிராம உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 03.09.2023 அன்று இரவு 10.30 மணிக்கு சித்தேரி கிராமத்தில் விக்னேஷ் (எ) விக்கி என்பவரை யாரோ கொலை செய்து சித்தேரி அல்ட்ராடெக் நிறுவனம் அருகில் உள்ள மாந்தோப்பில் நாகவேடு நீர்வளத்து கால்வாய் அருகே இறந்து கிடந்தார்.

இது சம்பந்தமாக 05.09.2023 அன்று காலை சுமார் 07.00 மணிக்கு எங்கள் கிராம நிர்வாக அலுவலருக்கு அரக்கோணம் கிராமிய காவல் ஆய்வாளர் போன் மூலம் தொடர்பு கொண்டு எதிரிகளை கைது செய்திருப்பதாகவும் அவர்களை விசாரணை செய்ய வேண்டி எங்களை சாட்சியாக இருக்க வரச்சொன்னதின் பேரில் கிராம நிர்வாக அலுவலர் உடன் நானும் சென்றேன்.

கும்மிடிப்பேட்டை புதுக்கிராஸ் ரோடு அருகே சதிஷ்

என்பவரை போலீசார் விசாரணை செய்துக்கொண்டிருந்தார். மேற்படி எதிரி சதிஷ் என்பவர் எங்கள் முன்னிலையில் வாக்குமூலம் கொடுத்தார். அவருக்கும் இறந்த விக்னேஷ் (எ) விக்கியின் மனைவி யாமினி தேவி என்பவருக்கும் தவறான தொடர்பு இருந்ததகாவும், இதற்கு இடையுறாக விக்கி (எ) விக்னேஷ் இருந்ததால் அவரை கொலை செய்ய தூண்டியதாகவும், சித்தேரி மாந்தோப்பு அருகே ஆஜர் எதிரி சதிஷ் என்பவர் விக்னேஷ் (எ) விக்கியை அழைத்து சென்று அவரை கைக்குட்டையால் கண்ணைக் கட்டிவிட்டு கத்தியால் கழுத்தை வெட்டியதகாவும் கொடுத்த வாக்குமூலத்தை எங்கள் முன்னிலையில் பதிவு செய்துக்கொண்டனர். அதில் சாட்சியாக நானும் என்னுடன் கிராம நிர்வாக அலுவலரும் சாட்சி கையொப்பம் செய்தோம்.

என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான் அது **அதசாஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அவரை அழைத்து சென்றால் 03.09.2023 அன்று இரவு சுமார் 10.30 மணிக்கு விக்னேஷ் (எ) விக்கியை கொலை செய்த இடத்தையும் அதற்கு பயன்படுத்திய கத்தி மற்றும் விக்னேஷ் (எ) விக்கியை 1–ம் எதிரி வெட்டும்போது டீ சர்ட்டில் படிந்த இரத்த கரைப் படிந்ததை கொளுத்திய இடத்தையும் எதிரி சதிஷினுடைய பேண்ட் மறைத்து வைத்திருந்த இடத்தையும் 1ம் எதிரி பயன்படுத்திய ITEL செல்போனையும் 1ம் எதிரி வசம் இருந்த இரு சக்கர வானத்தையும் எடுத்து ஆஜர் செய்வதாக கூறியதன் பேரில் நானும் எனது கிராம நிர்வாக அலுவலரும் கும்மினிப்பேட்டையில் பைபாஸ் கூட்ரோடு அருகே காவல் ஆய்வாளர் எங்களை ஆஜர் 1ம் எதிரி சதிஷீடன் அழைத்து சென்ற போது அங்கு முதல் எதிரி மேற்படி குற்ற

சம்பவத்திற்கு பயன்படுத்திய 1.இரு சக்கர வாகனம் (பஜாஜ் பல்சர்), 2. ITEL பட்டன் செல்போன் ஆகியவற்றை எடுத்து ஆஜர் செய்ததை மகஜரில் கைப்பற்றினார்கள்.

கும்மினிப்பேட்டையில் பைபாஸ் கூட்ரோடு அருகே உள்ள குட்டையில் இருந்து 1ம் எதிரி எடுத்து ஆஜர் செய்த அவர் அணிந்திருந்த இரத்த கரை படிந்த கருப்பு நிற ஜீன்ஸ் பேண்ட் ஒன்றும், எங்கள் முன்னிலையில் ஆய்வாளரால் மகஜரில் கைப்பற்றப்பட்டது அதில் சாட்சியங்களாக நானும் என்னுடன் கிராம நிர்வாக அலுவலரும் கையொப்பம் செய்தோம். மேலும் சித்தேரி ஏரிக்கரையின் அருகே இருந்து சம்பவத்தின் போது 1–ம் எதிரி அணிந்திருந்த இரத்தக்கரை படிந்த டீ சர்ட் எரிந்த சாம்பலை எடுத்து ஆஜர் செய்ததில் எங்கள் முன்னிலையில் ஆய்வாளரால் மகஜரில் கைப்பற்றப்பட்டது. அதில் சாட்சியங்களாக நானும் என்னுடன் கிராம நிர்வாக அலுவலரும் கையொப்பம் செய்தோம்.

மேலும் சம்பவ இடத்தில் இருந்து சிமெண்ட் சிலாப் அருகே மறைத்து வைத்திருந்த மரக்கைப்பிடியுடன் கூடிய கத்தி ஒன்றை 1ம் எதிரி எடுத்து ஆஜர் செய்ததை ஆய்வாளர் மகஜரில் கைப்பற்றினார். அதில் சாட்சியாக நானும் என்னுடன் கிராம நிர்வாக அலுவலரும் கையொப்பம் செய்தோம். அவைகள் முறையே **அதசாஆ.7** முதல் **அதசாஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேலும் அதே தேதியன்று 2–ம் எதிரி யாமினி தேவியை கைது செய்து ஆய்வாளர் விசாரித்துக்கொண்டிருந்த போது எங்கள் முன்னிலையில் 2ம் எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை ஆய்வாளர் பதிவு செய்தார், அதில் சாட்சியாக நானும் கிராம நிர்வாக அலுவலரும் சாட்சி கையொப்பம் செய்தோம். என்னிடம்

காண்பிக்கப்படும் 2ம் எதிரி யாமினி தேவியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான் அது **அதசாஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 2ம் எதிரியை அழைத்து சென்றால் அவர் சம்பவ சமயத்தில் பயன்படுத்திய கைப்பேசியை எடுத்து ஆஜர் செய்வதாக கூறியதன் அடிப்படையில் 05.09.2023 அன்று பிற்பகல் 12.30 மணிக்கு நானும் எனது கிராம நிர்வாக அலுவலரும் சித்தேரி கிராமத்தில் உள்ள 2ம் எதிரியின் வீட்டிற்கு காவல் ஆய்வாளர் எங்களை ஆஜர் 2ம் எதிரி யாமினி தேவியை அழைத்து சென்ற போது அங்கு 2ம் எதிரி மேற்படி குற்ற சம்பவத்திற்கு பயன்படுத்திய Realme 5–i Touch செல்போனை எடுத்து ஆஜர் செய்ததை மகஜரில் ஆய்வாளர் கைப்பற்றினார்.

அதில் சாட்சியாக நானும் என்னுடன் கிராம நிர்வாக அலுவலரும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான் அது **அதசாஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேற்படி ஆஜர் எதிரிகள் தான் எங்கள் முன்னிலையில் ஆய்வாளரால் கைது செய்யப்பட்டு விசாரணை செய்த போது ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தன் பேரில் வழக்கு சொத்துக்களை எடுத்து ஆஜர் செய்வதாக கூறியதன் அடிப்படையில் அவர்களை சம்பவ இடம் மற்றும் வழக்கு சொத்துக்களை மறைத்து வைத்திருந்த இடங்களுக்கு அழைத்து சென்று எடுத்து ஆஜர் செய்த போது நாங்கள் உடன் இருந்து சாட்சிகளாக கையொப்பம் செய்த நபர்களாவோம்.

இந்நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் 1) 1ம் எதிரியின் இரு சக்கர வாகனம், 2) 1ம் எதிரியின் ITEL பட்டன்

செல்போன், 3) 1–ம் எதிரி சதிஷ் அணிந்திருந்த இரத்தக்கரையுடன் கூடிய கருப்பு ஜீன்ஸ் பேண்ட் ஒன்று, 4) 1–ம் எதிரி சதிஷ் அணிந்திருந்த இரத்த கரை படிந்த டீ சர்ட் எரித்த சாம்பல் 25 கிராம், 5) மரக்கைப்பிடியுடன் கூடிய இரும்பு வெட்டு கத்தி ஒன்று, ஆகியவைகள் தான் 1ம் எதிரியிடம் இருந்து கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களாகும். அவைகள் முறையே **சா.பொ. 4** முதல் **சா.பொ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேலும், நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் Realme 5–I Touch என்ற செல்போன் தான் எங்கள முன்னிலையில் 2ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அவரை அவரது வீட்டருகே அழைத்து சென்ற போது எடுத்து ஆஜர் செய்யப்பட்ட வழக்கு சொத்தாகும். அது **சா.பொ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜாகியிருந்தும் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.11.07 18:58:18 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.